**MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR PROPOSED PROJECT OF THE M/S. K.A. RAJAGOPAL ROUGH STONE AND GRAVEL QUARRY AT S.F.NO. 293/1A (P) & 293/2B (P), MELUR DURAISAMYPURAM VILLAGE, RAJAPALAYAM TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 18.04.2023 AT 11:00 AM IN PASUMPON DEVAR KALAIYARANGAM, NO. 32, KASALAI THENVADAL STREET, SEITHUR VILLAGE, RAJAPALAYAM TALUK, VIRUDHUNAGAR DISTRICT.**

**Present:**

**Thiruvalargal:**

1. R.R.Viswanathan
   Revenue Divisional Officer/
   Sub-Divisional Magistrate,
   Sivakasi.

2. R.Gunaseelan
   District Environmental Engineer
   TamilNadu Pollution Control Board
   Virudhunagar District

3. D.M.Krishna Babu
   Assistant Environmental Engineer
   TamilNadu Pollution Control Board
   Madurai District

4. Government officers, Project Proponent and public (Copy of the Attendance Register is enclosed)

The Public Hearing was conducted under the chairmanship of Revenue Divisional Officer/Sub-Divisional Magistrate, Sivakai for the proposed project of M/s K.A. Rajagopal Rough Stone and Gravel Quarry at S.F.no. 293/1A (P) & 293/2B (P), Melur Duraisamypuram Village, Rajapalayam Taluk, Virudhunagar District on 18.04.2023, 11:00 am in Pasumpon Devar Kalaiyarangam, No. 32, Kasalai Thenvadal Street, Seithur Village, Rajapalayam Taluk, Virudhunagar District.

The District Environment Engineer, TNPCB, Virudhunagar welcomed the Revenue Divisional Officer, Government Officials, General Public and Environmental Activists who have attended the public nearing conducted for the project of M/s. KA. Rajagopal Rough Stone Quarry.

He explained that the public hearing meeting for M/s. KA. Rajagopal Rough Stone and Gravel Quarry at S.F.No. 293/1A(P) & 293/2B(P), Melur Duraisamypuram Village, Rajapalayam Taluk, Virudhunagar District is being conducted based on EIA Notification dated 14/09/2006 published by Ministry of Environment and Forest Climate Change, New Delhi.

Press release containing details of this public hearing meeting was published in Daily Thanthi and The Times of India newspapers dated on 09.03.2023. In this regard, District Environmental Engineer informed that the technical consultant of project proponent will make a presentation regarding the project, and requested the public to express their views one by one in apeaceful manner and also it in writing, so that all the proceedings will be recorded as video and will be submitted to the State Level Environment Impact Assessment Authority.

Further District Environmental Engineer requested the Revenue Divisional Officer to preside the public hearing meeting and initiate the proceedings.

Subsequently, Revenue Divisional Officer, Sivakasi précised the public hearing.

District Environmental Engineer requested the project consultant of the project proponent to explain about the project.

**Technical Presentation by Thiru.Saminathan, Project Consultant:**

Project Consultant explained the detailed report of the project of M/s. K.A.Rajagopal Rough Stone and Gravel Quarry and details about the impact on environmental, water, air and socio economical conditions due to the operation of the quarry and the proposed measures for the same.

Then, the public were furnished their views as follows.

**Thiru.Ammayappan, Vadakku Devathanam:**

He introduced himself as an Environmental Activist acting against the activities causes damage to environment and stated that there are so many quarries in this area and they are not following any rules and it cannot be believed that new quarry will follow the rules. Further he added that stones are being fallen on the school located nearby during the blasting operations by the quarries and there are agricultural lands, habitations and school near to the quarry and it will become an unsafe situation and hence he recorded his opposition against the project on behalf of public of Chockanathan puthur village.

**Thiru.Rajamani, Viswainathaperi:**

He stated that the project proponent has taken lease of his grandfather's land and made forgery. He further stated that project proponent was already operating a quarry in SF No.303 without following any rules. The project affects agriculture and hence requested not to grant license. He also stated that this public hearing would have been conducted in Melur Duraisamypuram Village.

**Thiru.Kalimuthu, Devipattinam:**

He stated that he is having 17 acres of land near the project site and there is no damage due to this quarry project.

**Thiru. Ramachandran, Seithur:**

He stated that this project of Thiru. Ramachandran is against the public and there are many quarries functioning in this area without any approval of Government. He informed that one person has died in the accident happened in Kollankondan Quary and the facts were suppressed and there are objections among public for the quarrying projects. It cannot be allowed to take away natural resources and this will affect the livelihood of people and there will be shortage of water sources. Finally, he denied for operating quarry.

**Thiru.Faisal Sulaiman,Naam Thamizhar Katchi, Rajapalayam :**

He represented his condemnation for conducting the public hearing at this location instead of at Melur Duraisamypuram. He also asked that whether the noise due to the blasting operation will not affect the operation of nearby government hospital and recorded his opposition against the project. Also, he informed that protest will be conducted by the Naam Thamizhar katchi, if any approval issued to the project.

**Thiru. Karuppasmy, Thalavaipuram:**

He introduced himself as Engineering graduate and informed that only 60 persons will get benefited due to the project proposal. He said that already, natural resources are being excavated and transported to Kerala with Tamilnadu GST sale registration. Also, he informed that they are excavating more than permitted and transporting more than allowed quantity in vehicles and requested not to permit the quarry. he also informed that protest will be conducted by the political party, if any approval issued to the project.

**Thiru. Kanagaraj, Tamil Puligal Katchi:**

He stated that already the existing quarries were carrying out mineral robbing and there are many quarries under operation in this area without any proper documents and also questioned the reason for conducting the public hearing at this location instead in Melur Duraisamypuram. He also said that the people who raise objections were facing court cases. He further said that trees in the quarry areas were deposited with dusts and ground water level is depleting due to these quarry operations. He further informed that no public hearings were conducted for establishing schools and hospital. He also questioned about necessity of granting permission to quarry while there is no availability good quality education.

Further he added that M/s. Saravana quarry is in operation without any permission and also requested to inspect the quality of the school located nearby. He

reported that all quarries in this area have not obtained permission from village Panchayat. If any permission issued to this project, protest will be conducted in this area.

**Thiru. Sivakasinathan, Chockkanathamputhur:**

He informed that there are already 2 out of 5 quarries in this area are in operation without any permission and requested to stop their operation and informed that there are temples, school and hospital are located near to the quarry and one temple located above the hill. Further, he requested to stop the quarries located nearby. He further informed that the public hearing should be conducted in Melur Duraisamypuram. He informed that protest will be conducted by the Naam Thamizhar katchi, if any approval issued to the project.

**Thiru. Veeranan, Tamilaga Vaazhvurimai Katchi, Rajapalayam:**

He stated that instead of protecting the natural resources, it is being sold out. The minerals are being sold out to other states. He questioned about the necessity of permitting new quarries while petitions were already given to close the existing quarries. He also informed that due to the blasting operation, loss of life is happened and vibrations will be happened in the buildings. Further he added that there are more numbers of insects and animals in the hill and they will get affected due to this project and hence he recorded his objection for the project. He informed that it is the duty of the government needs to protect the mineral resources. He finally said that if any permission issued to this project, protest will be conducted.

**Thiru. Vidiyal Veeraperumal, Social Activist:**

He stated that TNPCB is conducting public hearing for the quarry project but not taking any action against quarry operation if any complaints filed. The hillocks are storage pockets of ground water, whereas now the hillocks are being sold out for commercial purpose. He requested to ascertain the necessity for new quarries in this area by constituting an expert committee. He further informed that various

creatures will be migrated from their native location due to the quarry operation. Agriculture and ricemills are also getting affected and in turn creating revenue loss to the Government. Further he added that due to new establishment of quarries, the ground water course directions may get affected. As there is already enough number of quarries in this area, he requested that new quarry is not needed. If any permission granted to the quarry, case will be filed against the individuals in the court.

**Thiru. Karuppurajan, Chockkanathanpuththur:**

He stated that he is an asthma patient. The smoke during the blasting operation remains for half an hour and he recorded that no necessity of this project.

**Thiru. Shankar, Tractor Driver:**

He stated that he is working as driver and transporting the stone and gravel from the proponent's existing quarry and informed that blasting activity being carried out with safety precautions. He recorded that he has no objection in establishing the quarry project.

**Thiru. Jeyasundar, GanapathiSundaranachiyarpuram:**

He stated that the he came for the meeting to record his objection only. and he further stated that there are 5 numbers of quarries located within 1 Km radial distance and they are quarrying minerals in huge quantity without any permission and transporting to other states. Minerals are being illegally transported using fake certificates. He also stated that maternity hospital nearby is not able to function properly due to dust emanation and monthly 9 pregnant ladies are going to Rajapalayam area for their treatment.

He also requested to take action against the illegal quarries against which complaints were given. Finally, he told no need for new quarry and if permission granted inspite of these, protest will be conducted. He also requested to consider to issue permission to the project after conducting the public hearing in Melur Duraisamypuram Village.

**Thiru. Ramar, Devipattinam:**

He stated that he is working in the proponent's existing quarry for the past 10 years and reported 100 persons are working in quarries. He also informed that there are no impact due to quarrying operation and the villagers in this area do not know any other work and hence he welcomed the project.

At this juncture, there was some small dispute for sometime since there was objection raised by some people against the quarry workers offering their opinion.

**Thiru. Veerapandiyan, Rajapalayam:**

He introduced himself as a social activist and stated that EIA Notification is published by Government to protect both the mineral resources and public. He requested to take necessary measures to prevent dust emission to the nearby school and hospital. Project shall be implemented without affecting the public.

**Thiru. Manoharan, Rajapalayam:**

He requested the officials to submit the minutes of the meeting properly to their higher officials. He informed that the hillock in Devipattinam, which exists long ago is no more in existence now. He further informed that water scarcity problem will arise due to these quarries and requested to inspect the existing quarries and take necessary action and shall not give permission to new quarries. Also, he finally requested to take action to close down the existing quarries.

**Thiru. Tamilarasu, Thalavaipuram:**

He stated that people working in the quarries will get benefitted due to the project but people living nearby will get affected. The quarrying here is not necessary to transport to other states. He also told that no quarry owners are abiding the law and the quarries are functioning day and night. Protest will be conducted if permission will be granted.

**Thiru. Ramachandran, Seithur:**

While talking again, he stated to record the objections filed by the public only and not to record the views of persons who were all been assembled by the project proponent.

**Thiru. Thoongathakilavan, Chockkanathanputhur:**

He stated that he is a farmer and during his young age, he was doing goat herding in the hillock and now doing agricultural activity. Due to quarry operation, the movement of Python was increased and movement of peacock was decreased. Due to blasting operation, he could not be able to take his children to his agricultural land and the buildings are getting cracked and there is possibility of school building getting collapsed.

**Thiru. Ramasubramanian, Rajapalayam:**

He stated that this meeting would have been conducted in the project site area and this project will affect general public, pregnant ladies and hence requested to drop. If permitted, there will be a protest in this area.

**A Person without saying his name:**

He stated that already there are 5 quarries in this area and this is the 6th one and most of them came to the meeting have raised objections. The quarry operation and vehicle movement are being carried out in both day and night and hence requested not to allow this quarry and also to conduct this meeting in the project village itself.

**Thiru. Ayyanar, Chettiyarpatti:**

He stated that there are objections for quarries for long time in this area. Minerals are being transported to Kerala without any proper documents and the quarries in this area are doing blasting operations during night hours and hence requested to stop the quarries. He also requested to cancel this public hearing and to conduct the same in Melur Duraisamypuram Village.

**Thiru. Kamaraj, Chockkanathanpuththur:**

He stated that notice about this meeting is not reached to majority of public and hence requested to cancel this meeting and to conduct at the project area. Also reported that smoke emanating during blasting operations affecting the area.

**Thiru. Rajapandi, Chockkanathanpuththur:**

He stated that this meeting would have been conducted in Chockkanathanpuththur Village and informed that the notice about this meeting is not reached to majority of public. There is hospital and school near to the quarry and the blasting at quarrying site is causing vibration in school building and the dust from blasting activity is affecting agriculture and hence requested to cancel the quarry and the government shall ensure alternate job opportunities for the livelihood of people working there.

**Thiru. Rajamani, Viswanathaperi:**

While talking again, he requested the Village Administrative Officer and Panchayat president to announce that the project will not come.

**Thiru. Ramasundaram, Krishnapuram:**

He registered his objection for the quarry which is against the public and environment. Further he requested the public of Chockkanathanpuththur village to participate in the grama shaba meeting to be held on 1st, May and to pass resolutions to stop the operation of existing stone quarries and also against the establishment of new quarries.

**Thiru. Kumar, Mugavoor:**

He stated that stone quarries are affecting the food, cloth and habitations.

**Thiru. Jeyasundar, Sundharanatchiyarpuram:**

While speaking again, he stated that in the year 2023 alone, abortions happened to 8 pregnant ladies in Melur Duraisamypuram Village and it may be due to the huge noise of blasting operations.

**Thiru. Selvakumar, Keelavaragunarapuram:**

He stated that Thiru. Rajagopal's existing quarry is abiding the rules and hence he welcomed the project.

**Thiru. Vidiyal Veeraperumal, Virudhunagar:**

While speaking again, he stated that 'Mineral Resources Trust fund' is not being utilised properly and requested to conduct inspection by forming special committee to assess the pollution levels of air and water in this area.

**Thiru. Chinna, Chockkanathanpuththur:**

He stated that hillock, school and hospital located in this area needs to be protected and told that vibrations are felt in the houses nearby. The nearby hospital is not functioning due to non-availability of necessary facilities. Ground water level has gone much below. Hence requested to protect the natural resources and shall conduct this meeting in Chockkanathanpuththur village.

Further, as there was no person came forward to offer their views, the District Environmental has thanked all and requested to furnish their views in written petitions if any and 43 numbers of written petitions were received.

With this, the meeting came to an end.

26/04/23

**District Environmental Engineer(a/c),**
**TamilNadu Pollution Control Board,**
**Virudhunagar**

**Revenue Divisional Officer/**
**Sub-Divisional Magistrate,**
**Sivakasi**

**Enclosures:**

1. Copy of press release (Public Notice Published in Tamil & English) for notifying the public hearing meeting.
2. Copy of attendance sheet of the public hearing, (Total pages 8 & 98 persons)
3. Copy of Audio & Video (DVD - Disc) of the public hearing proceedings.
4. Petitions received from the public (43 Nos).

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், மேலூர் துரைச்சாமிபுரம் கிராமம் புல எண்கள்: 293/1A(P) மற்றும் 293/2B(P)-ல் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.கே.ஏ.இராஜகோபால் உடைகல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பாக 18.04.2023 காலை 11.00 மணியளவில் விருதுநகர் மாவட்டம், சேத்தூர் பேரூராட்சி கசாலைத் தென்வடல் தெருவில் கதவு எண்: 32ல் உள்ள பசும்பொன் தேவர் கலையரங்கத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள்:

பங்கேற்றோர்:

| | | |
|---|---|---|
| 01 | திரு.R.R.விஸ்வநாதன் | வருவாய் கோட்டாட்சியர்/ வருவாய் கோட்ட நிர்வாக நடுவர், சிவகாசி. |
| 02 | திரு.இரா.குணசீலன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்(கூ.பொ) தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், விருதுநகர். |
| 03 | திரு.து.மு.கிருஷ்ணபாபு | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், விருதுநகர். |

அரசு அதிகாரிகள், தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் 98 நபர்கள் பங்கேற்றனர் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது).

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், மேலூர் துரைச்சாமிபுரம் கிராமம், புல எண்கள் 293/1A(P) மற்றும் 293/2B(P)-ல் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. கே.ஏ.இராஜகோபால் உடைகல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பான பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டமானது விருதுநகர் மாவட்டம், சேத்தூர் பேரூராட்சி கசாலைத் தென்வடல் தெரு. கதவு எண். 32ல் உள்ள பசும்பொன்தேவர் கலையரங்கத்தில் 18.04.2023 காலை 11.00 மணியளவில் வருவாய் கோட்டாசியர்/ வருவாய் கோட்ட நிர்வாக நடுவர், சிவகாசி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்துள்ள வருவாய் கோட்டாசியர், சிவகாசி அவர்களையும், அரசு அதிகாரிகள், சுற்றுச்சூழல் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் வரவேற்றார். பின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கைகள் பற்றியும், பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் அவசியத்தை பற்றியும் எடுத்துக் கூறினார். இதுகுறித்து 09.03.2023 அன்று "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டது என்பதையும் தெரிவித்தார். பின் திட்டத்தினை பற்றி திட்ட உரிமையாளரின் தொழில்நுட்ப ஆலோசகர் விரிவாக கூறிய பின்னர் பொதுமக்கள் ஒருவர் பின் ஒருவராக தங்களின் பெயர் மற்றும் ஊரினை தெரிவித்து திட்டம் குறித்த தங்களின் கருத்தினை தெரிவிக்கலாம் எனக்கூறினார். கூட்டத்தின் அனைத்து நடவடிக்கைகளும் முழுமையாக வீடியோ பதிவு செய்யப்பட்டு, பொதுமக்களின் அனைத்து கருத்துக்களையும் பதிவு செய்து தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்தார். அதன்பின் வருவாய் கோட்டாசியர், சிவகாசி அவர்களை கூட்டத்தை தலைமையேற்று நடத்தி தருமாறு கேட்டுக்கொண்டார்.

பிறகு வருவாய் கோட்டாசியர், சிவகாசி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார்.

பின்பு மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அவர்கள் திட்ட உரிமையாளரின் தொழில்நுட்ப ஆலோசகர் அவர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தினை விவரிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

<u>திரு.சாமிநாதன், தொழில் நுட்ப ஆலோசகர்:</u>

திட்ட உரிமையாளரின் தொழில் நுட்ப ஆலோசகர், உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தினை பற்றியும், இத்திட்டத்தினால் சுற்றுச்சுழல், காற்று, நீர் மற்றும் சமூகப்

பொருளாதாரத்தில் ஏற்பட வாய்ப்புள்ள தாக்கங்கள் பற்றியும், அதை தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் விரிவாக விளக்கி கூறினார்.

அதைத் தொடர்ந்து, பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை பின்வருமாறு தெரிவித்தார்கள்.

<u>அம்மையப்பன், வடக்கு தேவதானம்:</u>

திரு.அம்மையப்பன் அவர்கள், தான் சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் செயல்களுக்கு எதிராக போராடும் அமைப்பை சார்ந்தவர் எனத்தெரிவித்தார். இப்பகுதியில் ஏற்கனவே பல குவாரிகள் இருப்பதாகவும், அவை விதிமுறைகளை பின்பற்றி நடைபெறுவதில்லை என்றும், ஆகவே புதிதாக வருகிற இந்த குவாரி விதிமுறைகளை பின்பற்றும் என்பதை தங்களால் நம்ப இயலாது எனவும் கூறினார். குவாரிகளில் வெடி வெடிக்கும் போது, அதன் அருகில் உள்ள பள்ளிக்கூடத்தில் கல் விழுவதாக கூறினார்.

மேலும் குவாரி செயல்படும் பொழுது உயிரினங்கள் ஒரு மலையிலிருந்து வேறு இடங்களுக்கு செல்லும் என்றும், குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்திற்கு அருகில் விவசாய நிலங்கள், குடியிருப்புகள் மற்றும் பள்ளி இருப்பதாகவும், அவற்றிக்கு முறையான பாதுகாப்பு இல்லாத நிலை உள்ளதாக தெரிவித்தார்.

கடைசியாக, இக்குவாரி திட்டத்திற்கு தான் கடுமையான எதிர்ப்பை சொக்கநாதன்புத்தூர் மக்கள் சார்பாக தெரிவிப்பதாக பதிவு செய்தார்.

<u>இராஜமணி, விஸ்வைநாதபேரி:</u>

திரு.இராஜமணி அவர்கள், குவாரி உரிமையாளர் தன்னுடைய பாட்டனாரின் நிலத்தை அடமானம் செய்து ஏமாற்றி விட்டார் என்றும், அவருடைய ஏற்கனவே புல எண் 303ல் இயங்கி வரும் குவாரி விதி மீறி செயல்படுவதாகவும் கூறினார். இங்கு விவசாயம் பண்ண இயலாது என்றும், கல் குவாரி அனுமதி கொடுக்க கூடாது எனவும், இந்த கருத்து கேட்பு கூட்டத்தை மேலூர் துரைச்சாமிபுரத்தில் நடத்தி இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

<u>காளிமுத்து, தேவிப்பட்டினம்:</u>

திரு. காளிமுத்து அவர்கள், தனக்கு குவாரி அருகில் 17 ஏக்கர் இடம் இருப்பதாகவும், இதுவரை குவாரியினால் தங்களுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்தார்.

<u>இராமசந்திரன், சேத்தூர்:</u>

திரு.இராமசந்திரன் அவர்கள், குவாரியானது மக்களுக்கு எதிரானது எனவும், இங்கு ஏற்கனவே பல குவாரிகள் இயங்கி வருவதாகவும், அரசு அனுமதி இல்லாமல் செயல்படுவதாகவும் தெரிவித்தார். கொல்லங்கொண்டான் பகுதியில் நடைபெற்ற குவாரி விபத்தில் ஒருவர் இறந்து விட்டதாகவும், அதை மூடி மறைத்து விட்டதாகவும் கூறினார். மேலும், குவாரி அமைக்க மக்கள் மத்தியில் எதிர்ப்பு இருப்பதாகவும் தெரிவித்தார். இயற்கை வளங்கள் கொள்ளை போவதை அனுமதிக்க இயலாது என்றும், பொதுமக்கள் வாழ்வதாரம் பாதிப்படையும், குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் எனத் தெரிவித்தார்.

கடைசியாக, கல்குவாரி நடத்தக் கூடாது எனக் கூறினார்.

<u>பைசல் சுலைமான், நாம் தமிழர் கட்சி, இராஜபாளையம்:</u>

திரு.பைசல் சுலைமான் அவர்கள், கருத்து கேட்பு கூட்டத்தை மேலூர் துரைச்சாமிபுரத்தில் நடத்தாமல் சேத்தூரில் நடத்துவதற்கு கண்டனம் தெரிவித்தார். திட்டப் பகுதியின் அருகில் அரசு மருத்துவமனை இருப்பதாகவும், அங்கு வெடி வெடிப்பதால் ஒலி பாதிப்பு ஏற்படாதா எனக் கேள்வி எழுப்பினார். இக்கல்குவாரி அமைப்பதை வன்மையாக கண்டிப்பதாகவும், மீறி அனுமதி அளித்தால் கட்சி சார்பில் போராட்டம் முன்னெடுக்கப்படும் எனக் கூறினார்.

<u>கருப்பசாமி, தளவாய்புரம்:</u>

திரு. கருப்பசாமி அவர்கள், தான் ஒரு பொறியியல் பட்டதாரி எனக் கூறினார். இக்குவாரித் திட்டத்தால் 60 பேருக்கு மட்டுமே நன்மை வாய்க்கும் எனவும், ஏற்கனவே உள்ள குவாரிகளில் கனிம வளங்கள்

கொள்ளையடிக்கப்படுவதாகவும், தமிழ்நாட்டில் GST பதிவு செய்து விட்டு அதை கேரளாவிற்கு கொண்டு செல்வதாகவும், அனுமதியளிக்கப்பட்ட அளவை விட அதிகளவு வெட்டி எடுப்பதாகவும், லாரிகளிலும் அதிக பாரம் ஏற்றப்படுவதாகவும் தெரிவித்தார். குவாரி நடத்த கூடாது என பதிவு செய்தார். மீறி அனுமதி அளித்தால் கட்சி சார்பில் போராட்டம் நடத்தப்படும் எனக் கூறினார்.

<u>கனகராஜ், தமிழ்புலிகள் கட்சி:</u>

திரு.கனகராஜ் அவர்கள், கல்குவாரிகளில் கனிமம் எடுக்கிறோம் என்ற பெயரில் கனிமங்களை திருடிக் கொண்டிருக்கிறார்கள் என்றும், ஏற்கனவே உள்ள குவாரிகள் முறையாக செயல்படுவதற்கான ஆவணங்கள் ஏதும் இல்லை என்றும் கூறினார். கூட்டத்தை மேலூர் துரைச்சாமிபுரத்தில் நடத்தாமல் இங்கு நடப்பதற்கு காரணம் என்ன என வினவினார். குவாரித் திட்டத்திற்கு இக்கூட்டங்களில் எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் மீது வழக்கு போடப்படுகிறது என்றும், குவாரி அருகே மரங்களில் தூசி படிந்து இருப்பதாகவும் தெரிவித்தார். குவாரிகள் உருவாவதால் நிலத்தடி நீர் மட்டம் குறையும் தெரிவித்தார். பள்ளிக்கூடம் மற்றும் மருத்துவமனை நிறுவுவதற்கான எந்த பொதுமக்கள் கூட்டமும் நடைபெற்றதில்லை எனவும், தரமான கல்வி கிடைக்காத நிலையில் குவாரிக்கு அனுமதி அளிக்க வேண்டிய அவசியம் என்ன எனக் கேட்டார். இங்குள்ள சரவணா குவாரி அனுமதி இல்லாமல் செயல்படுவதாகவும், அருகில் உள்ள பள்ளியின் தரத்தை ஆய்வு செய்ய வேண்டுமெனவும், இங்குள்ள குவாரிகள் ஏதும் ஊராட்சி அனுமதி இல்லாமல் செயல்படுவதாகவும் தெரிவித்தார். ஏற்கனவே உள்ள குவாரிகளின் அனுமதியை ரத்து செய்யுமாறும், இத்திட்டத்திற்கு அனுமதி வழங்ககூடாது எனவும் தெரிவித்தார். மீறி அனுமதி அளித்தால் போராட்டம் நடைபெறும் எனவும் கூறினார்.

<u>சிவகாசிநாதன், சொக்கநாதன்புத்தூர்:</u>

திரு.சிவகாசிநாதன் அவர்கள், இங்கு ஏற்கனவே ஒரு கிலோமீட்டர் சுற்றளவில் 5 குவாரிகள் உள்ளதாகவும், அவற்றில் 2 குவாரிகள் அனுமதி

இல்லாமல் இருப்பதாகவும், அவற்றை நிறுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். குவாரிக்கு அருகில் கோவில்கள், பள்ளி, அரசு மருத்துவமனை மற்றும் மலை மீது ஒரு கோவில் இருப்பதாகவும், அருகில் உள்ள குவாரியை தடை செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். இந்த கருத்து கேட்பு கூட்டத்தை மேலூர் துரைச்சாமிபுரத்தில் நடத்தி இருக்க வேண்டும் எனவும், குவாரிக்கு அனுமதி அளித்தால் நாம் தமிழர் கட்சி சார்பில் போராட்டம் நடைபெறும் எனவும் கூறினார்.

<u>வீரணன், தமிழக வாழ்வுரிமை கட்சி, இராஜபாளையம்:</u>

திரு. வீரணன் அவர்கள், அரசானது இயற்கை வளங்களை பாதுகாப்பதை விடுத்து அதை விற்று செயல்பட்டு வருவதாக தெரிவித்தார். கனிமவளங்களை வெளி மாநிலங்களுக்கு விற்பதாகவும், ஏற்கனவே உள்ள குவாரிகளை மூட மனு அளித்துவரும் நிலையில் புதிதாக ஏன் அனுமதியளிக்க வேண்டும் என வினவினார். குவாரிகளில் வெடி வெடிப்பதால் மக்களுக்கு உயிர்சேதம் மற்றும் கட்டிடங்களில் அதிர்வு ஏற்படுவதாகவும் தெரிவித்தார். மலைகளில் நிறைய சிறு பூச்சிகள் மற்றும் விலங்குகள் உள்ளன என்றும், இத்திட்டத்தால் அவற்றிற்க்கு பாதிப்பு ஏற்படும் எனவும், அதனால் கல்குவாரி அனுமதிக்கு கண்டனம் தெரிவிப்பதாகவும், கனிம வளங்களை காப்பது அரசின் கடமை எனவும் கூறினார். கடைசியில் கல்குவாரிகள் செயல்படுவதை வன்மையாக கண்டிப்பதாகவும் கூறினார். மேலும், இக்குவாரிக்கு அனுமதி அளித்தால் கட்சி சார்பில் மாபெரும் போராட்டம் நடத்தப்படும் எனவும் கூறினார்.

<u>விடியல் வீரபெருமாள், சுற்றுச்சூழல் ஆர்வலர்:</u>

திரு. விடியல் வீரபெருமாள் அவர்கள், குவாரி அனுமதிக்கு கூட்டம் நடத்தும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியமானது குவாரி செயல்படும் போது புகார் அளித்தால் நடவடிக்கை எடுப்பதில்லை எனக் கூறினார். இராஜபாளைம் பகுதிகளில் உள்ள மலைகுன்றுகளில் நிலத்தடி நீர் சேகரிக்கப்படுகின்ற நிலையில்

அதை தற்பொழுது அதை வியாபாரம் செய்து வருகிறார்கள் எனக் கூறினார் வல்லுநர் குழு அமைத்து இப்பகுதிகளில் கல்குவாரிகள் அமைக்க வேண்டுமா என ஆய்வு செய்ய வேண்டுமென கேட்டுக்கொண்டார். குவாரிகளால் உயிரினங்கள் இடம் பெயர்கின்றன எனவும், விவசாயம் மற்றும் ரைஸ்மில் தொழில்கள் பாதிப்படைகின்றன என்றும், அரசுக்கு வருமான இழப்பை ஏற்படுத்துவதாகவும் கூறினார். திட்ட உரிமையாளர் திரு.இராஜகோபால் அவர்களால் ஏற்கனவே இயக்கி வரும் குவாரியினால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், புதிய குவாரியினால் அங்குள்ள நிலத்தடி நீர்வழித்தடம் பாதிப்படையும் எனவும் கூறினார். இந்த கருத்து கேட்பு கூட்டத்தை இங்கு நடத்தி இருக்க கூடாது எனவும், ஏற்கனவே இங்கு தேவையான குவாரிகள் இருப்பதால் புதிய குவாரி வேண்டாம் என கேட்டுக் கொண்டார். மேலும், குவாரிக்கு அனுமதியளிக்கும் பட்சத்தில் தொடர்புள்ள அதிகாரிகள் மீது தனிநபர் வழக்கு தொடரப்படும் எனவும் தெரிவித்தார்.

<u>கருப்புராஜன், சொக்கநாதன் புத்தூர்:</u>

திரு. கருப்புராஜன் அவர்கள், தான் ஒரு ஆஸ்துமா நோயாளி எனவும், வெடி வெடிப்பதால் வரும் புகையானது அரைமணி நேரத்திற்கு இருக்கிறது எனவும், இந்த கல்குவாரி தேவையில்லை எனவும் கூறினார்.

<u>சங்கர், டிராக்டர் டிரைவர்:</u>

திரு. சங்கர் அவர்கள், தான் குவாரியில் கிராவல் மற்றும் கல் ஏற்றி செல்வதாகவும், முறையான பாதுகாப்போடு வெடி வைப்பதாகவும் தெரிவித்தார். குவாரி அமைவதில் ஆட்சேபனை ஏதும் இல்லை என தெரிவித்தார்.

<u>ஜெயசுந்தர், கணபதிசுந்தரநாச்சியார்புரம்:</u>

திரு.ஜெயசுந்தர் அவர்கள், தாங்கள் குவாரிக்கு எதிர்ப்பு தெரிவிக்கவே வந்துள்ளதாக கூறினார். இங்கு ஒரு கிலோமீட்டர் சுற்றளவில் 5 குவாரிகள் இருப்பதாகவும், அவை அனுமதி இல்லாமலும் அதிகமான கற்களை எடுப்பதாகவும்

தெரிவித்தார். இப்பகுதிகளில் இருந்து வெளிமாநிலங்களுக்கு கனிமவளம் கொண்டு செல்லப்படுவதாகவும், போலி சான்றிதழ்கள் மூலம் கல் கடத்தப்படுவதாகவும் தெரிவித்தார். இங்குள்ள மகப்பேறு மருத்துவமனையானது தூசி பரவுவதால் செயல்பட இயலவில்லை என்றும், மாதத்திற்கு 9 கர்ப்பிணிகள் இப்பகுதிகளில் இருந்து இராஜபாளையம் பகுதிக்கு சிகிச்சைக்கு செல்வதாகவும் கூறினார். இங்குள்ள குவாரிகள் மீது அளிக்கப்பட்ட புகார்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். இறுதியாக இங்கு குவாரி வேண்டாம் என்றும், மீறி அனுமதி வழங்கினால் போராட்டம் மேற்கொள்ளப்படும் எனக் கூறினார். மேலும், மேலூர் துரைச்சாமிபுரத்திலும் இது தொடர்பான கூட்டம் நடத்தப்பட்டு இத்திட்டத்திற்கு அனுமதி வழங்குவது பற்றி பரிசிலீக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

<u>இராமர், தேவிப்பட்டினம்:</u>

திரு. இராமர் அவர்கள், தான் இக்குவாரியில் 10 ஆண்டுகளாக வேலை செய்வதாகவும், சுமார் 100 நபர்கள் குவாரிகளில் வேலை செய்வதாகவும், குவாரிகளால் எந்த பாதிப்பு ஏதும் இல்லை எனவும் தெரிவித்தார். மேலும், அவர்களுக்கு வேறு வேலை தெரியாது எனவும், கல்குவாரி வேண்டும் எனவும் கூறினார்.

இந்நிலையில் குவாரி ஊழியர்கள் கருத்து தெரிவிப்பதற்கு கூட்டத்தில் சிலர் எதிர்ப்பு தெரிவித்தால் சற்று நேரம் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

<u>வீரபாண்டியன், இராஜபாளையம்:</u>

திரு. வீரபாண்டியன் அவர்கள், தான் ஒரு சமூக ஆர்வலர் எனத் தெரிவித்தார். கனிம வளம் மற்றும் மக்கள் ஆகிய இருவரையும் பாதுகாப்பதற்காக சுற்றுசசூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை அரசு வெளியிட்டுள்ளதாக கூறினார். அருகில் உள்ள பள்ளி மற்றும் மருத்துவமனைக்கு தூசி பரவமால் இருக்க தக்க நடவடிக்கை எடுத்து குவாரியை செயல்படுத்த

வேண்டுமெனவும், மக்களை பாதிக்காத வகையில் தொழில் நடத்த வேண்டும் எனக் கூறினார்.

<u>மனோகரன், இராஜபாளையம்:</u>

திரு. மனோகரன் அவர்கள், இங்குள்ள அதிகாரிகள் இக்கூட்டத்தின் குறிப்புகளை மேல் அதிகாரிகளுக்கு முறையாக அளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். தேவிபட்டினத்தில் பல வருடங்களுக்கு முன் இருந்த மலை தற்பொழுது இல்லை எனக் கூறினார். கல்குவாரிகளினால் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் எனக் கூறினார். ஏற்கனவே உள்ள குவாரிகளை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், புதிய குவாரிகள் வேண்டாம் எனவும் கூறினார். ஏற்கனவே உள்ள குவாரிகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கூறினார்.

<u>தமிழரசு, தளவாய்புரம்:</u>

திரு. தமிழரசு அவர்கள், குவாரிகளினால் அங்கு வேலை செய்பவர்களுக்கு மட்டும் பயன் கிடைக்கும், ஆனால் அருகில் குடியிருப்பவர்களுக்கு மிகவும் பாதிப்பு ஏற்படுத்தும் எனக் கூறினார். வெளி மாநிலங்களுக்கு கனிமம் அனுப்பவதற்கு இங்கு குவாரி தேவையில்லை எனக் கூறினார். எந்த முதலாளியும் சட்டபடி நடப்பதில்லை எனவும் கூறினார். குவாரிகள் விடிய விடிய இயங்குகிறது என்றும், குவாரிக்கு அனுமதி அளித்தால் போராட்டம் நடைபெறும் எனக் கூறினார்.

<u>இராமசந்திரன், சேத்தூர்:</u>

திரு. இராமசந்திரன் அவர்கள் மீண்டும் பேசுகையில், திட்ட உரிமையாளரால் அழைத்து வரப்பெற்றவர்களின் கருத்தை எடுத்துக் கொள்ளாமல், கூட்டத்தில் எதிர்ப்பு தெரிவித்தவர்களின் கருத்தை மட்டும் பதிவு செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

தூங்காதகிழவன், சொக்கநாதன்புத்தூர்:

திரு.தூங்காதகிழவன் அவர்கள், தான் ஒரு விவசாயி என்றும், சிறு வயதில் அங்குள்ள மலையில் ஆடு மேய்த்துள்ளதாகவும், தற்பொழுது அருகில் விவசாயம் செய்வதாகவும் கூறினார். தற்பொழுது குவாரிகள் இயங்குவதால், தன்னுடைய விவசாய நிலத்தில் மலைப்பாம்பு நடமாட்டம் அதிகரித்து இருப்பதாகவும், மயில்களின் நடமாட்டம் குறைந்து இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் வெடி வைப்பதால் தனது பிள்ளைகளை தன்னுடைய விவசாய நிலத்திற்கு அழைத்து செல்ல இயலவில்லை என்றும், அருகில் உள்ள கட்டிடங்களில் வெடிப்பு ஏற்படுவதாகவும், பள்ளி கட்டிடம் இடிந்து விழ வாய்ப்பிருப்பதாகவும் தெரிவித்தார்.

இராமசுப்பிரமணி, இராஜபாளையம்:

திரு. இராமசுப்பிரமணி அவர்கள், இக்கூட்டமானது திட்டப்பகுதியில் நடத்தியிருக்க வேண்டும் எனக் கூறினார். கல்குவாரி செயல்பாட்டால் பொது மக்கள் மற்றும் கர்ப்பிணி பெண்கள் பாதிப்படைவதாகவும், இத்திட்டத்தை கைவிட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். மீறி அனுமதி அளிக்கும் பட்சத்தில் மாநில அளவில் மக்கள் போராட்டம் நடைபெறும் எனக் கூறினார்.

பெயர் சொல்லாத நபர்:

இவர் பேசுகையில், இங்கு ஏற்கனவே 5 குவாரிகள் இருக்கின்றது. இது 6வது குவாரி ஆகும் என்றும், இங்கு வந்துள்ள பெரும்பாலானோர் எதிர்ப்பையே தெரிவித்துள்ளனர் என்றும், குவாரிகள் மற்றும் வாகன போக்குவரத்தானது இரவு பகல் பாராமால் அனைத்து நேரங்களிலும் செயல்படுகின்றன எனக் கூறினார். குவாரி வேண்டாம் என்றும், மீண்டும் திட்டப்பகுதியில் ஒரு கருத்து கேட்பு கூட்டம் நடத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அய்யனார், செட்டியார்பட்டி:

திரு. அய்யனார் அவர்கள், கல்குவாரி எதிர்ப்பு பல நாட்களாக இருப்பதாகவும், கேரளாவிற்கு தகுந்த ஆவணங்கள் இல்லாமல் கனிமம் எடுத்து

செல்லப்படுவதாகவும் கூறினார். தளவாய்புரம் பகுதி குவாரிகளில் இரவு நேரத்தில் வெடி வெடிப்பதாகவும், குவாரிகளை நிறுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இந்த கூட்டத்தை இரத்து செய்து சொக்கநாதன்புத்தூரில் கூட்டம் நடத்த வேண்டும் எனக் கூறினார்.

காமராஜ், சொக்கநாதன்புத்தூர்:

திரு.காமராஜ் அவர்கள், கூட்டம் தொடர்பான அறிவிப்பு பெரும்பான்மையானவர்களுக்கு கிடைக்கவில்லை எனவும், அதனால் கூட்டத்தை ரத்து செய்து அவர்களுடைய ஊரில் நடத்த வேண்டும் எனக் கூறினார். குவாரியில் வைக்கப்படும் வெடியினால் அதிக புகை ஏற்படுவதாகவும், அதனால் பாதிப்பு ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

இராஜபாண்டி, சொக்கநாதன்புத்தூர்:

திரு. இராஜபாண்டி அவர்கள், இக்கூட்டமானது சொக்கநாதன்புத்தூரில் நடத்தியிருக்க வேண்டும் எனவும், கூட்டம் தொடர்பான அறிவிப்பு பெரும்பான்மையானவர்களுக்கு கிடைக்கவில்லை எனவும், அருகில் மருத்துவமனை மற்றும் பள்ளி இருப்பதாகவும், வெடி வெடிப்பதால் பள்ளி கட்டிடம் அதிர்வடைதாகவும், வெடி புகையினால் விவசாயம் பாதிப்படைவதாகவும் கூறினார். கல்குவாரியை தடை செய்துவிட்டு அங்குள்ள ஊழியர்களுக்கு வேறு வேலையை அரசு உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இராஜமணி, விஸ்வைநாதப்பேரி:

திரு.இராஜமணி அவர்கள், மீண்டும் பேசுகையில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் பஞ்சாயத்து தலைவர் ஆகிய இருவரும் இத்திட்டம் வராது என தெரிவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இராமசுந்தரம், கிருஷ்ணாபுரம்:

திரு. இராமசுந்தரம் அவர்கள், பொதுமக்கள் மற்றும் சுற்றச்சுழலுக்கு எதிரான குவாரி செயல்பாட்டை எதிர்ப்பதாக கூறினார். மீறி அனுமதி அளிக்கும் பட்சத்தில் மக்களை ஒருங்கிணைத்து போராட்டம் நடைபெறும் எனக் கூறினார். மேலும்

சொக்கநாதன்புத்தூர் கிராம மக்களை மே-1 அன்று நடைபெற இருக்கும் கிராமசபை கூட்டத்தில் கலந்து கொண்டு கல்குவாரிகள் இயங்குவதை தடை செய்வதற்கும், புதிய குவாரிகள் வருவதை எதிர்த்தும் தீர்மானங்களை நிறைவேற்றுமாறு கேட்டுக்கொண்டார்.

<u>இரா.குமார், முகவூர்:</u>

திரு. குமார் அவர்கள், கல்குவாரி தூசியானது உணவு, உடை இருப்பிடம் ஆகிய மூன்றையும் பாதிப்பதாக தெரிவித்தார்.

<u>ஜெயசுந்தர், கணபதிசுந்தரநாச்சியார்புரம்:</u>

திரு. ஜெயசுந்தர் அவர்கள் மீண்டும் பேசுகையில், 2023ம் ஆண்டில் மட்டும் மேலசொக்கநாதன்புத்தூர் மற்றும் மேலூர் துரைச்சாமிபுரம் கிராமங்களில் 8 கர்ப்பிணிகளுக்கு கருச்சிதைவு ஏற்பட்டுள்ளது எனவும், அதற்கு காரணம் குவாரி வெடி சத்தமாக இருக்கலாம் எனவும் தெரிவித்தார்.

<u>செல்வகுமார், கீழவரகுணராமபுரம்:</u>

திரு. செல்வகுமார் அவர்கள், திரு. இராஜகோபாலின் குவாரி சட்ட விதிகளை மீறி இயங்கவில்லை எனவும், திட்டத்தை வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

<u>விடியல் வீரபெருமாள், விருதுநகர்:</u>

திரு. விடியல் வீரபெருமாள் அவர்கள் மீண்டும் பேசுகையில், கனிம வள அறக்கட்டளை நிதி முறையாக பயன்படுத்தப்படவில்லை எனவும், இப்பகுதியில் காற்று மற்றும் நீரின் மாசு குறித்து சிறப்பு குழு அமைத்து ஆய்வு செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

<u>சின்னா, சொக்கநாதன்புத்தூர்:</u>

திரு.சின்னா அவர்கள், குவாரிகளுக்கு அருகிலுள்ள மலை, பள்ளி, மருத்துவமனையை காப்பாற்ற வேண்டும் எனவும், அருகில் உள்ள வீடுகள் அதிர்வடைவதாகவும் கூறினார். மருத்துவமனையில் முறையான வசதிகள்

இல்லாததால் முழுமையாக இயங்கவில்லை எனவும், நிலத்தடி நீர் 800 அடிக்கும் கீழ் சென்று விட்டது எனவும் கூறினார். மேலும் இயற்கை வளத்தை பாதுகாக்க வேண்டும் என்றும் கருத்து கேட்பு கூட்டத்தை சொக்கநாதன்புத்தூரில் நடத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதன் பின்பு, வேறு யாரும் கருத்து கூற முன்வராததால், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் நன்றி தெரிவித்ததோடு எழுத்து பூர்வமான கருத்துக்கள் இருந்தால் சமர்ப்பிக்கலாம் எனக் கூறியதை தொடர்ந்து, 43 எழுத்துப்பூர்வ மனுக்கள் அளிக்கப்பட்டன.

அத்துடன், பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

26/04/23

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்(கூ.பொ)
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
விருதுநகர்.

வருவாய் கோட்டாட்சியர்/
வருவாய் கோட்ட நிர்வாக நடுவர்
சிவகாசி

இணைப்பு :

1. பத்திரிக்கை செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
2. வருகைப்பதிவேடு நகல்கள் (மொத்தம் 8 பக்கங்கள் மற்றும் 98 நபர்கள்)
3. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தின் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு
4. பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட மனுக்கள் (43 எண்ணங்கள்)